# சேனாபதிமுனி அருளிச் செய்த மணவாளமாமுனிகள் நூற்றந்தாதி



## பாசுரம் - 46

காணாதர் கபிலர்குரு கபாலி குதர்க்க மதங்கள்
காணாத படியழியக் கலைசெய் உலகாரியன் சொல்
பூணாக எதிபதியைப் போற்று மணவாளன்தாள்
பேணாத சேதனரைப் பேயென்பர் பெரியோரே.

## அர்த்தம்

காணாதர், கபிலர்,காபாலிகர் போன்ற குதர்க்க மதங்கள் கண்காணாமல் அழியும்படியாக நூல்களி அருளிச் செய்த உலகாசிரியர் திருவாக்குகளை ஆபரணாமாகக் கொண்டுஎதிராசரைப்போற்றும்மணவாளமாமுனிகள் உடைய திருவடிகளைப் பேணாத மனிதர்களைப் பெரியோர்களை பேய் என்பார்கள்.

**பாசுரம்-47**

என்பரம காருணிகன் எதிராசன் என்றிறைஞ்சி
அன்பருய உலகாரியன் அருள்வசன பூடணத்தை
முன்பருளி நமக்குத்தரைத்த மூர்த்தி மணவாளமுனி
பொன்பற்பாந் திருவடியைப் போற்றுமவர் புகலெமக்கே.

**அர்த்தம்**

எம்முடைய பரமகாருணகரான எம்பெருமானார் என்று இறைஞ்சி,அன்பர்கள் உய்வதற்காக உலகாசிரியர் அருளிச் செய்த ஸ்ரீவசனபூஷணம் என்னும் நூலை, நமக்கு விளக்கி உரைத்த, மணவாள மாமுனிகளின் பொன் தாமரை அடிகளைப் போற்றுபவர் எமக்குப் புகலாவர்கள்.

**பாசுரம்-48**

மக்கள் இறை பிறவிகுரு மாதாபிதா மாதர்தனம்
தக்ககதி சரணெல்லாம் தமக்கு எதிராசனென்று
மிக்கடைந்த வையகுரு மெய்க்கலையை விவரிக்கும்
முக்கியசீர் மணவாள முனிமொழியில் மூழ்கினமே.

**அர்த்தம்**

மக்கள்,தெய்வம், ஆச்சார்யன், தாய், தந்தையர், பெண்கள், செல்வம், தகுந்த வழி, சரண் எல்லாம் தமக்கு எம்பெருமானாரே என்று கொண்டு, அவரை அடைந்த உலகாசிரியர் அருளிச் செய்த நூல்களை விளக்கும் உயர்ந்த குணமுடைய மணவாள மாமுனிகளின் திருவாக்குகளில் நாம் மூழ்கி விட்டோம்.

**பாசுரம்-49**

இனமேதும் இல்லாமல் இலகும் இராமானுசனை
தினமேத்தி வையகுரு திருத்தம்பி செய்கலையை
மனமேத்தி விரித்தருளும் மணவாள மாமுனியைத்
தினமேவும் அடியார்க்குத் தரமறிந்து மேவுமினே.

## அர்த்தம்

தாழ்வேதும் இல்லாமல் இருப்பவரான இராமானுசரை தினந்தோறும் துதிக்கும் உலகாசிரியன் திருத்தம்பியரான அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் அருளிச் செயல்களை மனத்தில் கொண்டு, விரித்துரைக்கும் மணவாளமாமுனிகளைப் பணியும் அடியவர்களுடைய பெருமையறிந்து, அவர்களை அடையுங்கள்.

### பாசுரம்-50

மேவி எதிராசனையே மெய்ப்பொருளைச் சுருக்காகத்
தாவித்த விளாஞ்சோலைப் பிள்ளைதரத் தனிமொழியை
பாவித்த மணவாள மாமுனிவன் பதங்களையே
சேவித்த திருவாளர் செகத்துக்கோர் செழும்பூணே.

## அர்த்தம்

எம்பெருமானார் திருவடிகளையே பற்றி, மெய்ப்பொருளை மிகவும் சுருக்கமாக விளாஞ்சோலைப் பிள்ளை ஸப்தகாதை எனும் நூலில் அருளிய கருத்துகளை விளக்கியருளும் மணவாளமாமுனிகளின் திருவடிகளைச் சேவிப்பவர், உலகுக்கே சிறந்த அணிகலன்களாக விளங்குவர்.

---